2. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு / ஆட்சிமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு* (Syndicate) *ஒரு சட்டமன்ற உறுப்பினரையும், சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு* (Senate) *ஆறு சட்டமன்ற உறுப்பினர்களையும், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு* (Senate) *நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.*

மேற்குறிப்பிட்ட மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்பெறும் நாளிலிருந்து மூன்று ஆண்டு காலமாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விரும்புகிற வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 7–2–2013 அன்று பிற்பகல் 1–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புமனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புமனுக்கள் 7–2–2013 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 7–2–2013 அன்று மாலை 5–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

3. அறிக்கை அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுத் தலைவர் அவர்கள்.

முற்பகல் 11–35

திரு. ஞா. செந்தமிழன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறியவர் தம் வாழ்வு வளம்பெற, தமிழகத்தில் யாரும் எதற்காகவும், எந்தச் சூழ்நிலையிலும் கை ஏந்தக்கூடாது, வறுமை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் பணியாற்றி வரும் என்னுடைய அன்னையாய், ஆசானாய், இதய தெய்வமாய் விளங்குகின்ற கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் 2012–2013 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது (பதினான்காவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2013 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)